35 காலணு Regd. No. M. 2811.

சுதந்திரச்சங்கு

" சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தாணிக் கெல்லா மெடுத்தோதுவோமே'


வாரம் மும்முறை வெளிவரும்
வருட சந்தா 4½ ரூபா

Acc-No - 10813

ஆசிரியர் :
சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

போன் நே. 8088 பைக்ராப்ட்ஸ் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை. வியாழன் 20-4-33

ஓடுதே ஓட்டை மோட்டார்!



வரப்போகும் புதிய அரசியல், ஓட்டை மோட்டார் பஸ்ஸுக்கு சமானம். அதைத் தள்ளிக் கொண்டு ஓடுவதற்கென ஓர் குலாம் கூட்டத்தை சர்க்கார் தயார் செய்து வருகிறது. வலங்கிமான் ஸ்ரீநிவாச சாஸ்திரியாரும் கல்கத்தா கூட்டத்தில் இந்த மோட்டாரின் வேகத்தைப் பற்றி புகழ்ந்திருக்கிறார். "இந்த இயந்திரத்தின் வேகத்தை எதிர்ப்பதில் பயனில்லை. இதை ஓட்டுவதற்கென்று யாராவது சிலர் இருந்தே தீருவர். ஆகவே நாமும் சேர்ந்து கொண்டு தள்ளுவதுதான் நல்ல வழி!" சாஸ்திரியாரின் மூளை வேகம் இந்த மோட்டார் பஸ் வேகத்தை விட அதிகமா யிருக்கிறதே!

'ஹிந்து'வின் தத்தளிப்பு

ஆழம் தெரியாமல் காலை விட்டுவிட்டுத் தத்தளிப்பவன் நிலைமையில் இன்று சென்னை மிதவாதப் பத்திரிகையான 'ஹிந்து' இருக்கிறது. சில நாட்களுக்கு முன்னே அது காங்கிரஸ் மகா சபையைப்பற்றி அசட்டுத்தனமாக ஒரு தலையங்கம் வரையவே அதற்கு நாமும், 'ஸ்வராஜ்யா,' 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' போன்ற சக வர்த்தமானிகளும் சவுக்கடி தந்தோம். இப்போது ஹிந்துவின் விஷம அபிப்பிராயங்களைக் கண்டித்து பொறுப்புள்ள பிரபல காங்கிரஸ் வாதிகளில் சுமார் 75 பேர் கையெழுத்திட்டு ஓர் அறிக்கையை விடுத்திருக்கின்றனர்.

"நாட்டில் ஒற்றுமை ஏற்படாததற்கு காங்கிரஸின் சட்டமறுப்பியக்கம் காரணமாகும்" என்று விஷமத்தனமாக ஓர் கருத்தை நுழைத்து ஒரு பத்திரிகை தலையங்கம் எழுதுவதானால் அதை கண்டிக்காது விட்டு விடலாமா? ஹிந்துவின் கொள்கைகளைப்பற்றி யாருக்கும் கவலையில்லை. 'ஹிந்து'வை இனி திருத்திவிட முடியும் என்ற நம்பிக்கையும் எவருக்கும் கிடையாது. ஏனெனில் இவ்வளவு அரும் பெரும் ஊழியர்கள் சேர்ந்து விடுத்திருக்கும் ஓர் அறிக்கைக்குத் தலை வணங்க வேண்டியது ஹிந்துவின் கடமையாயிருக்க அதை மறந்து பதிலுக்குப் பதில் எழுதுவதற்கும் ஹிந்துவின் பேனா முயன்றிருக்கிறதல்லவா?

ஹிந்து எழுதிய தலையங்கத்தின் நோக்கத்தைப் பற்றி தலைவர்கள் பொருட் படுத்தவில்லை. ஆனால் அந்தக் கட்டுரையின் இடையிலுள்ள சில கருத்துக்களை ஆக்ஷேபித்தே தலைவர்கள் அறிக்கை விடுத்தனர். ஆனால் ஹிந்துவோ "இடையிலுள்ள கருத்துக்கள் சம்பந்தமாகச் சர்ச்சை நடத்த நாம் விரும்பவில்லை" என்று கூறி தப்பித்துக் கொள்ளப் பார்க்கின்றது. "ஏதோ கைத் தவறுதலாக அன்று அந்த வரிகள் விழுந்துவிட்டன" என்று பகிரங்கமாக மன்னிப்புக் கேட்டுக் கொள்வதால் ஹிந்துவுக்கு ஒன்றும் குறைந்து விடாது. ஆனால் அது அப்படிச் செய்யாமல் பேச்சை மாற்றும் தோரணையில் எதையெதையோ எழுதி பதில் எழுதி விட்டோமென்று மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறது.

தலைவர் முத்துரங்க முதலியார், டாக்டர் ராஜன், நாகேச்வரராவ், ருக்மணி லக்ஷ்மிபதி, டாக்டர் சாஸ்திரி போன்று காங்கிரஸுக்காகவே பிறந்து, காங்கிரஸிலேயே உழைத்து ஸர்வத்தையும் தியாகம் செய்துள்ள வீரர்களை, 'சில' காங்கிரஸ் வாதிகள் விடுத்த அறிக்கை கிடைத்தது என்று 'ஹிந்து' எழுதுவது அதன் மனப் போக்கை 'போட்டோ' எடுத்தாற்போலிருக்கிறது. ஆனால் 'பல' காங்கிரஸ் வாதிகளும் ஊழியர்களும், காங்கிரஸ் கொள்கை மாற வேண்டுமென்று அபிப்பிராயப் படுவது தெரிகிறது என்று மறுபடியும் 'ஹிந்து' எழுதுவது விந்தையே! யார் அந்த 'பலர்' என்று மறுபடியும் ஹிந்துவைக் கேட்கின்றோம். ஆனால் ஒன்று மட்டும் ஹிந்துவுக்குத் தெரியப்படுத்திக் கொள்கிறோம். குதிரைப் பந்தயம், சினிமாப் பக்கம், ஹாஸ்யப் பகுதி, சதுரங்க ஆட்டம். அந்நிய நாட்டு ராஜீயம், படேவியா ஆரஞ்சுப் பழம் போன்ற விஷயங்களைப் பற்றி எவ்வளவு வேணுமானாலும் ஹிந்துவில் நிரப்பிக் கொண்டிருக்கட்டும். தற்கால ராஜீயப் போக்கைப் பற்றிய அபிப்பிராயம், ஆலோசனை முதலியவைகளை இதரப் பத்திரிகைகள் கவனித்துக் கொள்ளுமென்பதை நினைப்பூட்டுகிறோம்.

அடுத்தாற் போல 'ஹிந்து' பத்திரிகையின் பிடில் போன்ற 'சுதேசமித்திர'னும் தனது மூக்கை இந்த வாதத்தில் நுழைத்துக் கொண்டு தவிக்கிறது. ஹிந்துப் பத்திரிகையை ஆதரித்து சுதேசமித்திரன் ஒரு குறிப்பும் எழுதியிருக்கிறது. ஆனால் அதுவும் தலைவர்கள் கண்டித்த விஷயம் எதுவென்பதை மறந்து விட்டு வேறெதையோ பற்றி எழுதியிருப்பது தான் கவனிக்கத் தக்கது. இனம் இனத்தோடு சேர்ந்தே திருமன்றோ!

அது மட்டுமன்று. இன்றைக்குச் சிறையிலில்லாமல் வெளியிலிருந்து கொண்டிருக்கும் காங்கிரஸ் வாதிகள் சட்ட மறுப்பினின்று விலகி விட்டார்களென்று ஒரு ஹேஷ்யம் கற்பிப்பது மித்திரனின் விஷம புத்தியையே காட்டுகின்றது. மித்திரனது ஹேஷ்யத்தை ஒரு பொருட்டாக எண்ணி நாம் வாக்குவாதம் நடத்த விரும்புகின்றோமில்லை. சகவாஸ தோஷத்தால் ஏற்படும் விஷம புத்தியைக் கேவலம் கண்டனத்தால் திருத்த முடியாதல்லவா?

ஆனால் இனி இந்தப் பத்திரிகைகள் தலையங்கள் எழுதும்போது எச்சரிக்கையோடு எழுதுமென எதிர்பார்க்கின்றோம். தொடர்ந்து தவறையே செய்து கொண்டிருப்பவர்களைத் தெய்வம் தான் திருத்த வேண்டும்; தெய்வம் தான் காக்க வேண்டும்!

மாமியாரின் பொம்மைக் கதை

பொருள் தேடுவதற்காக ஒருவன் வேற்று நாட்டுக்குப் போகவேண்டியிருந்தது. ஆகவே அவன் தனது மனைவியின் காலக்ஷேபத்திற்காக கையில் கொஞ்சம் பணம் கொடுத்து விட்டுப் போனான். போதாவிட்டால் கடன் வாங்கிக் கொள்ளவும் ஏற்பாடு செய்து போனான். புருஷன் போன பின்பு மனைவிக்குத் தனிக் குடித்தனம் செய்யப் பயமா யிருந்தது. ஆகவே அவள் ஒரு தோழியிடம் சென்று தன் பயத்தைத் தெரிவித்தாள்.

வஞ்சனை மிகுந்த தோழி "அடி அசடே! பயப்படாதே! வீட்டிலே யாராவது பெரியவாள் இருக்கணும் என்பார்கள். அதற்காக ஒரு மரப் பொம்மையை 'மாமியார்' என்று வைத்துக் கொள். சாப்பாடு முதலியன போட்டு பொம்மையை வீட்டில் காப்பாற்றி வா. மாமியார் சாப்பிடாத போனால் என்னிடம் வந்து சொல்லு. நான் வந்து மாமியாரைச் சாப்பிடச் செய்கிறேன்" என்று கூறியதோடு ஒரு மரப் பொம்மையையும் தந்தாள்.

அந்த அசட்டுப் பெண், மாமியாரை இடுப்பில் தூக்கிக் கொண்டு வீடு வந்து சேர்ந்தாள். தினந்தோறும் குளிப்பாட்டி பொம்மையைச் சமையலறைக்கு எடுத்துச் செல்வாள். அவளுடைய தோழி சரியாகச் சாப்பாட்டுவேளைக்கு வந்து சேருவாள். சாதமெல்லாம் இலையில் பரிமாறி பொம்மைக் கருகில் வைக்கப்பட்டிருக்கும். அப்போது தோழி சொல்வாள்: "நாட்டுப் பெண்ணுக்கு எதிரே சாப்பிடுவதற்கு மாமியார் வெட்கப் படுகிறாள். நீ கொஞ்சம் அறைக்கு வெளியே போ." உடனே நாட்டுப் பெண் வெளியே போய்விடுவாள். அரை மணி கழித்து வந்து பார்த்தால், வெறும் இலைதானிருக்கும். மாமியார் சாப்பிட்டு விட்டாரென நாட்டுப் பெண் சந்தோஷப் பட்டுக்கொண்டிருந்தாள். தோழி இப்படியாக இனமாகச் சாப்பிட்டு வந்தாள்.

வெளி நாடு சென்றிருந்த புருடன் திரும்பி வந்து பார்த்தான். தனக்கும் மாமியாருக்கும் சாப்பாட்டிற் கென்று பெண்டாட்டி ஏராளமாகக் கடன் வாங்கி யிருப்பதைக் கண்டான். இந்த அசட்டு நாட்டுப் பெண்ணை என்னென்பது!

"வெள்ளைக் கடுதாசி" என்பது மரத்தாலான மாமியாருக்குச் சமானம். அதைத் தந்த தோழியான தேவி பிரிட்டானியா நல்லெண்ணத்தோடு தரவில்லை. நாட்டுப் பெண் போன்ற இந்திய மிதவாதிகள், இந்த மாமியாரை சம்ரக்ஷிக்க முற்படுகின்றார்கள். கல்கத்தாவில் நடந்த மிதவாத மகா நாட்டின் பேச்சு மாமியாரைச் சம்ரக்ஷிக்கும் நோக்கத்தோடேயே நடத்தப்பட்டது. இந்த வெள்ளைக் கடுதாசித் திட்டத்தைக் காப்பதால் யாருக்கு வயிறு நிரம்பும்? 'மாமியார்' பொம்மையைத் தந்த தோழிக்குத் தான் வயிறு நிரம்பும். இந்தியாவுக்கு அதனால் நஷ்டம் தான். நாளைக்குப் பதில் சொல்ல வேண்டு மென்ற ஞாபகம் மிதவாதிகளுக்கு இல்லை போலும்!

அன்று பாத்ரோ எங்கே?

சென்னையில் யாரோ சில 'யுவர்கள்' கூடி மகா நாடு ஒன்றை நடத்தினார்கள். மகா நாட்டுக்கு பரசுராம பாத்ரோவைத் தலைவராகப் பொறுக்கி யெடுத்தார்களென்றால் அந்த 'யுவர்'களின் ஞானத்தைப் பற்றி அதிகம் வர்ணிக்க வேண்டாம். ஆனால் பொறுக்கினவர்களை விட பொறுக்கப்பட்ட பாத்ரோவின் நாடகம் தான் வெகு அழகு! மகா நாட்டிற்கு தலைவரான பாத்ரோ துரை, அன்று விஜயம் செய்யவில்லை. எங்கேயோ ஐரோப்பியர் விருந்துக்குப் போய் விட்டாராம். 'யுவர்'களைவிட ஐரோப்பியர் விருந்து அவசியமென பாத்ரோ நினைத்தார் போலும்! இந்தப் 'பாத்ரோ' போன்ற பேர்வழிகளுக்கு பொதுஜன வாழ்க்கையில் இன்னமும் இடந்தர விரும்பிய 'யுவர்'களுக்கு இந்த மூக்குடைப்பு வேண்டியதுதான்! கடைசியில் இந்த யுவர் கான்பரன்ஸ் ரகளையில் முடிந்ததும் எதிர் பார்த்த விஷயம் தான்!

தாய் எட்டடி தாண்டினால்—

தீண்டாமை விலக்கு மசோதாக்களை இந்திய சர்க்கார் என்னென்னவோ சாகசங்கள் செய்து, தள்ளிப் போட்டு விட்டது. இந்திய சர்க்காரின் அரவணைப்பிலிருக்கும் சுதேச சமஸ்தானங்களைப் பற்றி அப்புறம் கேட்கவும் வேண்டுமா? மைசூர் சட்ட சபையில் வந்த தீண்டாமை விலக்கு மசோதாவைச் சபைக்குள் நுழைப்பதற்கே அனுமதி கிடையாதென்று, இப்பொழுது மைசூர் அரசாங்கம் மறுத்து விட்டதாம். தாய் எட்டடி தாண்டினால், குட்டி பதினாறடி தாண்டாதா?

கோமாளியின் குறிப்புகள்

குமாஸ்தா பட்டாளம்

“இந்தியாவின் ராஜீயத்தை சீமையிலுள்ள அரசாங்கம் ஆட்டி வைக்கின்றது. இந்தியாவின் வியாபாரத்தை பம்பாய் ஆட்டி வைக்கிறது. இந்தியாவின் கலைஞானத்தை வங்காளம் வளர்த்து வருகிறது. இந்திய ஆபீசுகளுக்கு குமாஸ்தாக்களை சென்னை தந்து கொண்டிருக்கிறது” என்று ஓர் அஸெம்பிளி அங்கத்தினர் அன்று கூறினார். சென்னைக்குக் கிடைத்த ‘சர்டிபிகேட்’ நமக்கு கௌரவ மூட்டுவதா, வெட்கம் தருவதா வென்பது புரியவில்லை.

வருமான வரி ‘டிமிக்கி’

வருமான வரி சரியாகத் தராமல் ‘டிமிக்கி’ தருவதற்காக வியாபாரிகள் இரண்டு விதக் கணக்குகளை எழுதி வருகிறார்களாம். சொந்தத்துக்கு ஒரு கணக்கும், சர்க்காருக்கு வேறு கணக்கும் சமர்ப்பிப்பது வழக்கமாய் விட்டதென்று ஓர் சர்க்கார் அதிகாரி முறையிடுகின்றார். ஓர் தொழிலில் வருமானம் வந்தால் அதன் மீது வரி வாங்கிக் கொள்ள சர்க்கார் முனைகின்றனர். ஆனால் அந்தத் தொழிலில் நஷ்டம் வந்தால், அந்தத் தொழிலுக்கு ‘நஷ்டமான்யம்’ தருவதற்கு சர்க்கார் தயாரா யிருக்கின்றனரா வென்று ஒரு வர்த்தகர் கேட்கின்றார். இந்தக் கேள்விக்குப் பதிற் சொல்லாது அதிகாரிகள் ‘டிமிக்கி’ கொடுப்பார்களா?

பாகம் பிரிக்கும் அழகு

ஒரு தொழிலுக்கு இரண்டு அம்சங்கள் உண்டு. ‘வேலை’ என்பது ஒன்று. ‘லாபம்’ என்பது இன்னொன்று. தற்காலத்திலுள்ள தொழிற் சாலைகள் பாரபட்சமில்லாமல் தமது பங்காளிகளுக்கு பகிர்ந்து கொடுத்து வருகின்றன என்கின்றார் ஒரு கோமாளி! ‘வேலை’ யெல்லாம் தொழிலாளருக்கும், ‘லாப’ மெல்லாம் முதலாளிகளுக்கும்! இவ்வளவு நேர்த்தியாக யாராலாவது பாகம் பிரிக்க முடியுமா?

“போ போ, வா வா”

இந்தியச் சட்ட சபை அங்கத்தினர்களின் பெருமையைச் சொல்ல, ஆயிரம் நாவு படைத்ததாகச் சொல்லுகிறார்களே, அந்த ஆதிசேஷனும் முடியாது. வைசிராய் சபையைக் கலைத்து விட்டார். இதனால், ஏறக்குறைய நூறு கேள்விகள் குப்பைத் தொட்டிக்குப் போய் விட்டனவாம். “நீ கேள்வி கேட்டதும், தீர்மானம் கொண்டு வந்ததும் போதும், போ போ” என்றால், சபையோர் மூட்டை கட்டிக் கொண்டு, ஊருக்குப் புறப்பட வேண்டியது தான். ஆனால், சர்க்கார் வேலை ரொம்ப இருக்கிறதாம். ஆகையால், அரசாங்கம் சற்று முன்னதாகவே அடுத்த கூட்டத்தைக் கூட்டுவதற்கு, “வா வா” என்று கூப்பிடப் போகிறதாம். அரசாங்கத்தின் அழைப்பைப் பெற்ற அங்கத்தினர்கள் சிறிதாவது தாமதிப்பார்களோ? நாலு நாள் முன்னதாகவே இவர்கள் கிளம்பி விடுவார்களன்றோ!

கல்யாண மார்க்கட்டு

எல்லா மார்க்கட்டுகளிலும் மந்தம் ஏற்பட்டது போல கல்யாண மார்க்கட்டிலும் இந்த வருஷம் மந்தம் ஏற்பட்டிருக்கிறது. பத்திரிகைகளில் உள்ள விளம்பரங்களைப் பார்த்தால், இவ்வளவு சாமர்த்தியசாலிகளான பையன்களுக்கும், இவ்வளவு நேர்த்தியான பெண்களுக்கும் கூடவா வரன்கள் கிடைக்கவில்லை யென்ற ஆச்சர்யம் ஏற்படுகின்றது. லாட்டரியில் மோசடிகள் நடப்பதைத் தடுக்க சர்க்கார் ‘லைசென்ஸ்’ தருவது போல கல்யாண லாட்டரியையும் சர்க்கார் ஒரு கண்ணால் பார்க்க வேண்டு மென்று தோன்றுகிறது.

வாய்க் கொழுப்பு

பிரிட்டிஷ் அரசியல் வாதிகளுள் சிலர் “குட்டி குலைத்து நாயின் தலையில் வைப்பது” போல வாய்க் கொழுப்பாக எதையாவது கூறி விடுவார்கள். அதனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பாடு திண்டாட்ட மாகிவிடும். காமன்ஸ் சபை விவாதத்தில், “ஜெர்மனி மற்ற நாடுகளின்மீது ஆதிக்கம் செலுத்தவே விரும்புகிறது. அகம்பாவம் பிடித்திருக்கிறது” என்று, சாம்பர்லேன், சர்ச்சில் ஆகிய இருவரும் பிதற்றி விட்டார்கள். ஸர் ஸைமன் இவர்கள் வாயைக் கட்ட முடியவில்லை. ஜெர்மன் அரசாங்கம் உடனே இதைக் கண்டித்தது. ஜெர்மன் பத்திரிகைகளும் நல்ல சாட்டை கொடுத்திருக்கின்றன. அவற்றுள் ஒன்று கூறுவதாவது:—“உலகம் போயர் யுத்தத்தை அதற்குள் மறக்கவில்லை. அமிருதசரஸ் படுகொலையையோ, அயர்லாந்தில் நடந்த பிளாக் அண்டு டான் கொடுமையையோ மறந்து விடவில்லை. யுத்தத்துக்கு அப்புறமும், இந்தியாவின் சுதந்திரத்துக்காகப் போராடும் காந்தியோடு 50 ஆயிரம் பேர் சிறைக்குள் அடைக்கப் பட்டதுதான் மறந்து போகுமோ?” ஜெர்மனியை இந்த வாயாடிகள் குறை கூறுவானேன்! பிறகு வாங்கிக் கட்டிக்கொள்வானேன்?

எனது உபவாஸப் பலன்

(மகாத்மா காந்தி)

தீனபந்து ஆண்ட்ரூஸ் எழுதியுள்ள ஒரு கடிதம் என் மனதைக் கவர்ந்துளது. எனது உபவாஸத்தின் பயனாக நாட்டில் என்னென்ன நடந்தது என்பதை நான் யோசித்துப் பார்த்தேன். நான் 'பிராயோபவேச' விரதம் ஏற்றபோது அநேக ஹிந்துக்கள் நல்ல நடமாறி விட்டார்கள். உபவாஸ காலத்தில் அநேக இடங்களில் கோயில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்து விட்டார்கள். ஆனால் எனது உபவாஸம் முடிந்தவுடன் திறக்கப்பட்ட கோயில்களில் பல, ஹரிஜனங்களுக்கு சாத்தப்பட்டு விட்டதெனக் கேள்விப்பட்டேன். அதுமட்டு மன்று. உபவாஸத்தினால் உந்தப்பட்டு சில மாகாண வாசிகள் பூனா ஒப்பந்தத்துக்கு ஒப்புக் கொண்டனரென்றும் இப்போது அறிகிறேன். வங்காள ஜாதி ஹிந்துக்கள் பிறகு புகார் கூற ஆரம்பித்தனர். எல்லோருக்கும் ஒரு வார்த்தை! 'உபவாஸ விரதம்' நானாய்ச் செய்து கொண்டதல்ல. மேலும் தாத்காலிகமாக மெய் மறந்து சில காரியங்கள் செய்யப்பட்டிருப்பினும் அவை நற்காரியமாகவே இருந்திருக்கின்றன.

ஆனால் எனது உண்ணாவிரதத்தை சில ஸனாதனிகள் சபிக்கின்றனர். ஹிந்து மதத்தில் உபவாஸ விரதத்துக்கு பெரிதும் இடமிருக்கிறது. சின்னஞ்சிறிய விஷயங்களுக்குக் கூட ஹிந்துக்கள் உண்ணா விரதம் ஏற்பதுண்டு.

சதைத்திமிரை அடக்குவதால் ஆத்மா முன்னேற்ற மடைவதாக உலகத்து அறிஞர்கள் சொல்லியிருக்கின்றனர். தெய்வப் பிரார்த்தனையில் இன்றியமையாத அம்சம் உண்ணாவிரதமேயென்றும் கூறியிருக்கின்றனர். முற்றிலும் உபவாஸம் இருத்தல் பற்றற்ற வாழ்க்கையின் அநுஷ்டானமே யாகும். "ஈசா! என் உயிரை எடுத்துக் கொள். உனக்காகவே நான் வாழ்வேனாக" என்று வெறும் உதட்டால் முணுமுணுப்பதைவிட தேகத்தால் செய்து காட்டுவது மேலல்லவா?

ஆத்ம முன்னேற்றத்துக்கும், நாட்டின் முன்னேற்றத்துக்கும் உபவாச விரதம் உதவி செய்யும் சக்தியுடையது. ஆகவே யாதொரு முன்னெச்சரிக்கையுமின்றி உபவாஸ விரதம் மீண்டும் என் வாழ்க்கையில் வரக்கூடும். அதை சந்தோஷத்தோடு நான் வரவேற்பேன்.

—ஹரிஜனம்.

'ஹரிஜன தினம்'

(மகாத்மா காந்தி)

சென்ற டிசம்பர் 18-ம் உ யன்று ஹரிஜன தினத்தை அநுஷ்டித்தோம். ஸ்ரீயுத தாக்கர் அவர்களைக் கலந்து ஆலோசித்த பின்பு ஏப்ரல் மீ 30உ கடைசி ஞாயிற்றுக்கிழமையை ஹரிஜன தினமாக தேசமெங்கும் அநுஷ்டிக்கலாமெனத் தீர்மானித்தோம். அன்றைய தினத்தை எவ்வாறு கொண்டாடுவதென்பதைச் சொல்கின்றேன்.

1. காலையில் 5 மணிக்கு தெய்வப் பிரார்த்தனை முடிந்ததும் அவரவர் சக்திக்கு ஏற்றவாறு பணமோ, துணியோ, தானியமோ எதையேனும் ஹரிஜனங்களுக் கென்று எடுத்து வைக்கவேண்டும். ஏழையாயிருப்பவர்கள் கூட ஒரு வேளை ஆகாரத்தைத் தியாகம் செய்து அதை ஏழைகட்குக் கொடுக்கலாமல்லவா?

2. 'துடைப்ப வீரர்கள்' என்று நமது தோட்டிகளைச் சொல்கின்றோம். அன்றைய தினத்தில் நமது தோட்டியின் வேலைக்கு நாமும் உதவி செய்ய முற்பட வேண்டும். அப்போதுதான் தோட்டி வேலையின் கஷ்டத்தைப் பற்றி நாம் கொஞ்சமாவது உணர்ந்து கொள்ள இட மேற்படும்.

3. அன்று வீடு வீடாகச் சென்று ஹரிஜன சேவைக்காகப் பணம் சேர்க்கலாம். ஹரிஜன முன்னேற்ற சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களையும், புத்தகங்களையும் விற்பதற்கும், விநியோகிப்பதற்கும் தொண்டர்கள் முற்பட வேண்டும்.

4. ஹரிஜனச் சேரிகள் சுத்தமாக ஆக்கப்படுவதற்கு அனைவரும் பாடுபட வேண்டும். தீண்டாமை நம் நாட்டை விட்டுப் போக வேண்டுமாயின் ஹரிஜனங்கள் என்னென்ன செய்யவேண்டுமென்பதை அவர்களுக்கு அறிவுறுத்த வேண்டும். மாட்டிறைச்சி தின்னலாகாதென்பதை வற்புறுத்த வேண்டும்.

5. அன்று மேல் ஜாதியார்களும், ஹரிஜனங்களும் சேர்ந்த பொதுக் கூட்டத்தை நடத்தலாம். ஆலயப் பிரவேச மசோதாவுக்கு ஆதரவு சம்பாதிக்கலாம்.

6. சவுகரியப்பட்ட இடங்களில் பொதுக் கிணறுகளையும், கோயில்களையும் திறப்பதற்கு முயல வேண்டும்.

ஆங்காங்கு நடக்கும் கொண்டாட்டத்தைப் பத்திரிகைகளுக்கும் ஹரிஜன சேவாசங்கத்துக்கும் அறிவிக்க வேண்டும். —'ஹரிஜனம்.

"முட்ட முட்டக் குனி"

இந்திய மிதவாதிகளுக்கு முதுகெலும்பு கிடையாது. ஆனால், எதற்கெடுத்தாலும் முந்திரிக் கொட்டை மாதிரி முன்னே வருவது அவர்கள் பிறவிக் குணமாகி விட்டது. தங்களால் ஒன்றும் முடியா விட்டால், "அப்பாடா, சாமியே" என்று மூலையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறது தானே!

அவர்கள் இப்பொழுது, கல்கத்தாவில் ஓர் மகாநாடு கூடி விட்டார்கள். அதன் தலைவர் ராமச்சந்திர ராவின் பிரசங்கத்தைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. சர்க்கரை மடித்துக் குப்பைத் தொட்டிகளி லெறிந்திருந்த பத்திரிகைகளில் கண்ட வெள்ளைக் கடுதாசு அபிப்பிராயங்களையெல்லாம் திரட்டி அவர் தலைமைப் பிரசங்கம் பண்ணி விட்டார்.

வலங்கிமான் ஸ்ரீனிவாச சாஸ்திரியாரோ ஏக அழுகை அழுது விட்டார். "என் செயலாவது யாதொன்று மில்லை இனித் தெய்வமே" என்று அவர் புலம்புகிறார். "நமது ராஜீய அதிருஷ்டங்கள் நிரம்பத் தாழ்ந்து போய்விட்டன. தேசியக் கோரிக்கையைக் கூட இப்பொழுது வற்புறுத்த வேண்டாமென்று நான் தலைவர்களை வேண்டிக் கொள்ளுவேன். அரசியல் இயந்திரம் நாம் கட்டளை போட்டால், நிற்கப்போவதில்லை. அதை அபிவிருத்தி செய்ய முடியாவிட்டாலும், நாம் பின்னே போகாதபடி அதை ஏற்று நடத்த வேண்டியது தான்" என்று சாஸ்திரியார் கூறுகிறார். பிரிட்டிஷார் நம் தலையில் எழுதுகிறபடியே தான் எல்லாம் நடக்கும், நம்மால் ஒன்றும் முடியாது என்று இவருக்குத் தோன்றினால், தமது பிலாக்கணத்தை வீட்டிற்குள் உட்கார்ந்து பாடுகிறது தானே! ஊர் சிரிக்க வெளியே வந்து அலறுவானேன்?

மிதவாதிகள் செய்ய விருக்கும் தீர்மானத்தைப் பற்றியும் சொல்ல வேண்டியதில்லை. சீர்திருத்தத்தை அடியோடு நிராகரிப்பதால் பயன் ஏற்படாதாம். ஆகையால், அதை இரண்டு கையும் ஏந்தி வரவேற்கத் தான் போகிறார்களாம். "முட்ட முட்டக் குனி" என்பதே மிதவாதிகள் வேதாந்தம் என்பது எல்லாருக்குந் தெரிந்தது தானே. ஆனால் செயல் புரிவதற்குத் தெம்பும் திறனும் தீரமும் இல்லாதவர்கள் புலம்புவதை யாரும் இலட்சியம் செய்ய மாட்டார்கள்.

இந்தியா இழந்த தங்கம்

இப்பொழுது, பிரிட்டனின் ஸ்டெர்லிங்குக்குத் தங்கம் கிடையாது. அது வெறுங் கடுதாசி நாணயமாகவே யிருக்கிறது. அதோடு, நமது வெள்ளி ரூபாயைச் சர்க்கார் முடிபோட்டிருக்கிறார்கள். இதனால், இது வரையில், 1,21,71,66,851 ரூபாய் பெறுமான தங்கம் நமது நாட்டை விட்டு ஓடிப் போய் விட்டது.

இப்படி ஏனையா, நமது தங்கத்தை யெல்லாம், முக்கியமாகப் பிரிட்டனுக்கும் பிற நாடுகளுக்கும் கொட்டி யழவேண்டு மென்றால், "ஓ! அதிலும் சில லாபமுண்டு" என்று விஸ்தாரம் பேசுகிறார் ஸர். ஷுஸ்டர். ஆபத்து சம்பத்துக்கு உதவட்டு மென்று ஜனங்கள் மூலை முடுக்கில் பதுக்கி வைத்திருந்த தங்கமெல்லாம் இப்பொழுது வயிற்றுச் சாமிக்குப் பூசை செய்வதில் போய் விடுவது நலமா? நாம் முதலையே அழித்தாலும், நம்முடைய அந்தஸ்துப் போகாமல் காப்பாற்றிக் கொள்ளுகிறோமாம்! குப்புற அடித்து விழுந்தாலும் அதுவும் ஓர் கை வரிசை என்கிறார் ஷுஸ்டர்.

ஷுஸ்டர் தம்முடைய இந்த அபூர்வ யோசனையைத் தமக்குத் தாக்கீது அனுப்பிக் கொண்டிருக்கும் பிரிட்டனுக்குச் சொல்லுவாரா? "உன்னை யாரப்பா கேட்டது?" என்று பிரிட்டிஷ் அரசாங்கம் அவரை மண்டையி லல்லவா அடிக்கும்?

இம்மாதிரி தங்கம் வெளி நாடுகளுக்கு இடைவிடாமல் கப்பல் பிரயாணம் செய்ய விட்டுக் கொண்டிருப்பதைக் கண்டித்து, டில்லியில் கூடிய இந்திய வர்த்தக சங்கத்தார் சில தீர்மானங்கள் செய்து விட்டார்கள். சர்க்காரைக் கண்டிப்பதாலும், பிரார்த்தனை செய்வதாலும் ஏது பயன்? இதை ஒருவர் ஆட்சேபித்து, வியாபாரிகள் தங்கம் அனுப்புவதை நிறுத்தும்படி தீர்மானம் செய்யவேண்டு மென்றார். ஏதோ சாக்குச் சொல்லி, இந்த யோசனையை நிராகரித்து விட்டார்கள்.

மயிலே மயிலே இறகு போடென்றால் போடுமா? வியாபாரிகள் துளிக்கூடத் தேச பக்தி யில்லாமல், தங்கள் லாபத்திலேயே கண்ணுங் கருத்துமா யிருக்கும் வரையில், ஒன்றும் பயன் கிடைக்காது. அவர்கள் ஒற்றுமையாகச் செயல் புரிய வேண்டும். அதை விட்டு, அசையாது கல்லுப் பிள்ளையார் போன்றிருக்கும் அரசாங்கத்துக்குத் திரும்ப திரும்ப மனுக்கள் போடுவதால் லாப மென்ன?

பத்திரிகைகளின் சாவு

இந்தியன் தான் அற்பாயுளில் சாகின்றானென்றால் இந்திய பாஷைகளில் நடத்தப்படும் பத்திரிகைகளுமா அற்பாயுளில் சாகவேண்டும்? பத்து வருஷத்துக்குள் எத்தனை பத்திரிகைகள் பிறந்து பிறந்து இறந்து போயிருக்கின்றன! தாய் மொழிப் பத்திரிகைகள் தான் பொது ஜனங்களுக்கு மிகவும் உபயோகமானது. சில விடங்களில் அந்நிய பாஷைப் பத்திரிகைகளை விட வெகு நேர்த்தியாக தாய் மொழிகளில் பத்திரிகைகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. அப்படிக் கிருந்தும் தாய் மொழிப் பத்திரிகைகளே அற்பாயுளில் சாகின்றன. இதற்குக் காரணமென்ன? முக்கியமான காரணம் நம்மவருக்கு அந்நிய பாஷைப் பத்திரிகை யிடத்தில் பிரமாதமான மோகம் ஏற்பட்டிருக்கிறது. தாய் மொழி யிடத்தில் சிரத்தையே கிடையாது. அதன் பயனாக ஆதரிப்பாரற்று தேச பாஷைப் பத்திரிகைகள் அடிக்கடி செத்துப் போய்க் கொண்டிருக்கின்றன. பத்திரிகை யிடத்தில் அன்பு ஏற்படுவதில்லை. என்றைக்கு நம்மவருக்கு தேச பாஷைகளிடம் அன்பு ஏற்படுமோ தெரியவில்லை. நிற்க,

சுதேச பாஷைகளில் எப்போது முதன் முதலில் பத்திரிகைகள் ஏற்பட்டன வென்பது ஒரு நல்ல கேள்வி. 1816ம் ௵த்தில் வங்காளியில் 'வங்காள கஜட்' என்ற பத்திரிகை தோன்றிற்றாம். 1818ம் ௵த்தில் 'திக்தர்சன்' என்ற வங்காளி மாதாந்தரப் பத்திரிகை வெளியாகத் தொடங்கிற்று. அதே வருஷத்தில் 'சமாசார தர்ப்பண்' என்ற இன்னொரு பத்திரிகையும் தோன்றிற்று. இவைகளை யெல்லாம் கிறிஸ்தவ பாதிரிமார்கள் நடத்தி வந்தனர்.

1821ம் ௵த்தில் 'சம்வாத கௌமுதி' என்ற வங்காளிப் பத்திரிகை இந்தியர்களால் வெளியிடப் பட்டது. பிறகு ராஜாராம் மோகன் ராய் தோன்றி இந்தியர்களால் அநேக பத்திரிகைகள் ஏற்படுமாறு செய்தார். 1823ம் வருஷத்தில் சர்க்கார் கெடுபிடியின் காரணமாக 'மிருத்துள் அக்பர்' என்ற பத்திரிகை இறந்தது. எத்தனையோ பத்திரிகைகள் தோன்றித் தோன்றி மறைந்தன. இன்றுள்ள பத்திரிகைகளில் மிக்க வயதான தேசபாஷைப் பத்திரிகை ஒன்றுதான். அதற்குப் பெயர் 'பம்பாய் சமாசார்'. அது குஜராத்திப் பத்திரிகை. 1812ம் வருஷத்தில் பிறந்ததாகும். அந்தத் தாத்தா சிரஞ்சீவியாக வளர்வாராக!

சட்டம்—ஒரு கழுதை

சட்டம் ஒரு கழுதை என்பார்கள். அது வெறுங் கழுதை யல்ல, ஒரு கொண்டிக் கழுதை என்றே சொல்ல வேண்டியதா யிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு வழக்கு நடந்திருக்கிறது அலஹாபாது ஹைக்கோர்ட்டில்.

ஜகத் நாராயன் என்பவர், எடாவா ஸப்ஜட்ஜியான ஸ்ரீ பிரிஜ் ஹாரிலால் என்பவரிடம் வந்து ஒரு வழக்கில் தமக்குச் சாதகமாகத் தீர்ப்புக் கூறினால், 10000 ரூபாய் லஞ்சம் கொடுப்பதாகக் கூறினாராம். ஜட்ஜிக்கு அவமானம் வந்து நாராயணனை வெளியே தாத்தி விட்டாராம். மாலையில் இவ்விஷயத்தை ஜில்லாக் கலெக்டரிடம் ஜட்ஜி கூறினாராம். "நாராயணன் சர்க்காருக்கு 12000 ரூ. கிஸ்தி தரவேண்டும். லஞ்சத்தை வாங்குங்கள். கிஸ்திக்கு வரவு வைத்து விடலாம்" என்றாராம் கலெக்டர். கடைசியில் 'லஞ்சமும்' கொடுக்கப்பட்டதாம். அந்த சமயத்தில் கலெக்டர், தாசில்தார் முதலிய அதிகாரிகளும் கவிந்து கொண்டார்களாம். இது தான் வழக்கின் சாரம்.

ஹைக்கோர்ட் ஜட்ஜிகள், மோஹன் லஞ்சம் கொடுக்க முயன்றது உண்மையே என்று விசாரணையில் தெரிந்து கொண்டார்கள். இதில் யாரைத் தண்டிப்பது? என்ன தண்டனை விதிப்பது? இவைகள் தான் கேள்விகள்.

மோகன் லஞ்சமே கொடுத்தார். ஆனால் நீதிபதியோ, கலெக்டருக்கு உபகாரமாக வரிப் பணத்தையே வாங்கினார். லஞ்சமாகக் கொடுத்த பணம், வரிப்பணமாக உருமாறி விட்டது.

மதன் மோகனுக்கும் அவரோடு சேர்ந்த தினகரராவுக்கும் முறையே ரூ. 100ம் ரூ.200ம் அபராதம் விதிக்கப்பட்டது. சட்டப்படி இதற்கு மேல் ஒன்றும் செய்ய முடியவில்லை.

ஆனால், நியாயத்தைப் பார்ப்போம். எதிரிகள் லஞ்சம் கொடுக்க வந்தது குற்றமே. அதை ஏமாற்றி வாங்கி வரிப்பணமாக மாற்றிக் கொடுக்க, ஜட்ஜி வலை வீசியதும் குற்றமன்றோ! அதற்குச் சூழ்ச்சி புரிந்த கலெக்டர் உடந்தைக் குற்றம் புரிந்தவராகாரோ? இதை ஒரு சாமான்ய அறிவு படைத்த மனிதனும் ஒப்புக்கொள்ளுவான். ஆனால், சட்டத்துக்கோ இந்தச் சாமான்ய ஞானமும் கிடையாது. அது ஒரு வெறும் "டாங்கி" (கழுதை)யே யல்லவா?

சட்ட மறுப்பியக்கம்

திருமங்கலத்தில் 7 பேர் கைதியானார்கள். நல்லைத்தூரில் 4 பேருக்கு தலா 4 மாதம். கான்பூரில் 4 பேர் கைதியானார்கள். ஆந்திர இளைஞர் தலைவரான பூக்கராஜு கைதியானார். பங்களூரில் அந்நியத் துணிக் கடைகளில் மறியல் செய்த 8 தொண்டர்கள் கைது செய்யப் பட்டார்கள்.

கல்கத்தாக் காங்கிரஸ் பிரதிநிதிகள்

கல்கத்தாக் காங்கிரஸுக்குப் புறப்பட்ட பிரதிநிதிகள் 2,500 பேராம். இவருள் கல்கத்தா போய்ச் சேர்ந்தவரின் மாகாணவாரி விவரம் வருமாறு:—ஐக்கிய மாகாணம் 673; வங்காளம் 300; பீகார் 284; ஒரிஸ்ஸா 43; ஆந்திரா 23; தமிழ் நாடு 27; கேரளம் 7; மகா ராஷ்டிரம் 25; பம்பாய் 22; குஜராத் 31; மத்திய மாகாணம் (ஹிந்தி) 50; மத்திய மாகாணம் (மராத்தி) 22; பேரார் 15; கர்னாடகம் 3; சிந்து 5; அஜ்மீர் 3; டெல்லி 17; அஸ்ஸாம் 29; பஞ்சாப் 31; வடமேற்கு எல்லைப்புறம் 6.

காங்கிரஸ் ஆபீஸ் கைப்பற்றப்பட்டது

போலீஸார் பாட்னாவில் காங்கிரஸ் ஆபீஸைச் சோதனை போட்டு, கைப்பற்றிக் கொண்டார்கள். ஆபீஸிலிருந்த சருஷிலா தேவியும் பிறரும் வெளியிலுள்ள ஓர் ஆலமரத்தடியில் சத்தியாக்கிரகம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

வரப்போவது கறுப்புத் தாள்

பம்பாயில் ஸ்ரீமதி சரோஜினி தேவியை ஒரு நிருபர் பேட்டி கண்டபொழுது, "வெள்ளைக் கடுதாசைப் பற்றி ஏன் தொல்லைப் படுகிறீர்கள்? அது பழசாய்ப்போய் விட்டது. இப்பொழுது யாருக்கும் அதில் ருசி யில்லை. அடுத்து வரப்போகும் கறுப்புக் கடிதத்தை எதிர் பார்த்துக் கொண்டிருப்போமே" என்று கூறினாள்.

வெள்ளைந் தாளுக்கு சிவப்புத் தாள்

ருஷ்யாவில் பிரிட்டிஷ் எஞ்சினீர்கள் மீது நடக்கும் வழக்கு விஷயமாக பிரிட்டிஷ் சர்க்கார் வெளியிட்ட வெள்ளை அறிக்கைக்குப் பதிலாக, ருஷ்ய அரசாங்கம் ஒரு சிவப்பு அறிக்கை வெளி யிட்டிருக்கிறது. "எங்கள் சுதந்திரத்தை நாங்கள் வியாபாரம் செய்ய மாட்டோம்" என்று அதில் கூறப்பட்டிருக்கிறது.

"உபவாசம் வேண்டாம்"!

"நீங்கள் எங்களுக்காக உபவாசம் கிடக்கலாகாது. அது எங்களுக்கு அவமானமாயிருக்கிறது" என்று கிசாபாய், தாராபாய் என்னும் இரு ஹரிஜனத் தலைவர்கள் மகாத்மாஜியை உருக்கமாக வேண்டிக் கொண்டதற்கு, "ஹிந்து சமூகம் உங்களுக்கு நீதி வழங்கா விட்டால், நான் மறுபடியும் உபவாசந்தான் கிடப்பேன்" என்று மகாத்மா பதிலளித்து விட்டார்.

ஹரிஜன சேவை

ஈழுவர்கள் நாகர்கோயிலில் தங்களுக்குச் சொந்தமான முத்தாரம்மன் கோயிலில் ஹரிஜனங்கள் உள்பட யாவரும் பிரவேசிக்க அநுமதித்து விட்டார்கள். மேலும் ஈழுவருக்குச் சொந்தமான ஒரு கிணற்றிலும் வேறிரண்டு கிணறுகளிலும் ஹரிஜனங்கள் உள்பட யாவரும் தண்ணீர் எடுத்துக் கொள்ளவும் அநுமதித்து விட்டார்கள்.

அர்த்தம் தெரியாது முணுமுணுத்தால்

பரோடா அரசாங்கத்தார் ஒரு சட்டம் நிறைவேற்றி யிருக்கிறார்கள். புரோகிதர்கள் கல்யாண காலத்தில் முணுமுணுக்கும் மந்திரங்களின் அர்த்தத்தைத் தம்பதிகளுக்கு விளக்கிச் சொல்லா விட்டால், புரோகிதருக்கு இச் சட்டத்தின்படி 50 ரூபாய் அபராதம் விதிக்கப் படும்.

"இங்கிலாந்தை விட்டுப் பிரிய வேண்டும்"

ஈஸ்டர் விழாவை, அயர்லாந்துக் குடியரசுப் படையினர் 5000 பேர் சேர்ந்து டப்ளினில் கொண்டாடினார்கள். பிரிட்டனை விட்டுப் பிரிந்து விடுவதே தங்கள் நோக்க மென்று ஒரு அறிக்கையை ஷ படையின் நிர்வாக சபை வாசித்தது.

பிரஞ்சு ஜெர்மன் மனஸ்தாபம்

.ஜெர்மானியர் ரைன் நதிக்கரை வழியாக வந்து, பிரஞ்சுக் கோட்டைக் கொத்தளங்களை போட்டோப் பிடித்துக் கொண்டு போய் விட்டார்களாம். இதனாலும், வேறு சில சிறு சம்பவங்களாலும், ஜெர்மானியரிடம் பிரஞ்சுக்காரருக்கு மனஸ்தாபம் ஏற்பட்டிருக்கிறதாம்.

Edited and Published by S. Subramanian
and Printed by M. R. Seshan, at the Lunar Printing Press, Triplicane, Madras.